DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 362/2023 PW : 1

Name : பொம்மி Age – 63

W/o : மயாகிருஷ்ணன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 09.02.2026

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. என்னுடைய வாதுரையை தமிழில் விளக்கி என்னுடைய வழக்கறிஞர் சொன்னார். இந்த விவரத்தை நான் என்னுடைய வாதுரையில் குறிப்பிடவில்லை. எனக்கு ஆஙகிலம் படிக்க தெரியாததால் என்னுடைய தாவாவில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தாவா சொத்தை கிரையம் கொடுப்பதாக சொல்லி என்னிடம் முன் பணம் பெற்றார்கள் ஆனால் எனக்க எழுதிக்கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் முன்பணமாக ரூ.50,000/– பிரதிவாதியிடம் கொடுத்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் ரூ.50,000/– குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் எந்த வித முன் பணமும் கொடுக்காமல் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது.

2) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது எனக்கு 65

வயதாகிறது. வாதுரையில் என்னுடைய வயது விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் வடக்கிலும், கிழக்கிலும் என்னுடைய சொத்து தான் உள்ளது. அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 38 வருடங்கள் நான் அனுபவித்து வருவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா அவ்வாறு தாக்கல் செய்யவில்லை. தற்போது இவ்வாறு கேட்டதால் என்னால் தாக்கல் செய்யமுடியவில்லை. நான் 38 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்தது இல்லை என்றால் அவ்வாறு எந்த சொத்து என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இதற்கு முன்பு நான் செங்கல் சூளையாக வைத்துள்ளேன். தாவா சொத்தில் செங்கல் சூளை வைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். இதற்கு முன் இதை பற்றி சொல்லவில்லை. தற்போது தான் சாட்சி அளிக்கிறேன். தாவா சொத்தில் நான் எந்த வித செங்கல் சூளைளை அறுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்து சேசையா என்பவடைய சொத்து ஆகும். நான் என்னுடைய தாவாவில் குறிப்பிட்டுள்ளது போல் 1, 2 & 4 பிரதிவாதிகள் தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதிகள் எனக்கு விற்பனை ஆவணம் பதிவு செய்து தரும்படி அதிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி, 1, 2 பிரதிவாதியின் முகவர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். 5ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதியின் முகவர் என்றால் அதுவும் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். பிரதிவாதிகள் யார் யார் என்று எந்த விவரமும் தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அனைத்து பிரதிவாதிகள் மீதும் நான் பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிமையில்லாத நபர்களையும் சேர்த்து பரிகாரம் கோரியதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தான் உரிமையாளர் என்று சொல்லிவிட்டு 38 ஆண்டுகளாக தாவா சொத்து என் வசம் உள்ளது என்று இந்த வழககிற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 6ம் பிரதிவாதியின் உரிமையிலும், சுவாதீனத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. ஆனால் EC–ல் அவர் பெயரில் தான் உள்ளது.

4) 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுப்பதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். எந்த தேதியில் கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள் என்று என்னுடைய வாதுரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆன வழக்கறிஞர் அறிவிப்பிலும் நான் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1, 2 மற்றும் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுப்பதாக சொன்னது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க நோக்கத்தோடு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துளளேன் என்றால் சரியல்ல. நான் முன்பணமாக ரூ.50,000/– எந்த தேதியில் கொடுத்தேன் என்பதை கிரைய ஒப்பந்ததை பார்த்தால் தான் எனக்கு தெரியும். கிரைய ஒப்பந்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துளளேனா என்பதை வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். பிரதிவாதிகள் என்னிடம் எந்த வித கிரைய ஒப்பந்தம் போடாததால் அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு கிரைய முன்பணம் கொடுத்திருந்தால் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு முன்பணம் எதுவும் கொடுக்காததால் எந்த வித ஒப்பந்தமும் போடப்படவில்லை என்றால் சரியல்ல.

5) என்னுடைய வாதுரையில் 2020 வரை கொரணா இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் 06.03.2023 அன்று நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பத்திர பதிவு செய்து கொடுக்காமல் தள்ளிக்கொண்டே போனது என்று என்னுடைய வாதுரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த

எந்த தேதியில் பத்திர பதிவு தள்ளி போய்விட்டது என்ற விபரங்கள் என்னுடைய வாதுரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் போன் மூலமாக அந்த தகவல்கள் எனக்கு கிடைத்தால் என்னால் சொல்ல இயலவில்லை. நான் மேறபடி சொன்ன விவரங்கள் தற்போது தான் புதியதாக சாட்சியத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த கால கட்டத்திலும் சொத்தை கிரையம் கொடுக்க முன்வரவில்லை என்றாலும் அதனால் பதிவு செய்தது தள்ளிபோய்விட்டது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொன்னால் எனக்கு தண்டனை வழங்கப்படும் என்ற விபரம் எனக்கு தெரியும் ஆனால் நான் எந்த வித பொய் சாட்சியம் சொல்லவில்லை. வா.சா.ஆ.1 பற்றிய விவரம் வாதுரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பற்றி எந்த விவரமும் சொல்லாமல் அதை தாக்கல் செய்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் சட்டத்திற்கு முரணாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தவறான முறையில் பெற்றதால் என் மீதும், தொழுவுர் VAO மீதும் குற்றவியல் நடைமுறை மேற்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரைய தொகை செலுத்தி உரிய முறையில் கிரையம் பெற்றுள்ளது செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சட்டப்படியான உரிமையாளர் 6ம் பிரதிவாதி தான் என்றாலும், அவர் தான் சுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.09 17:46:42 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.